பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 10 | சனிக்கிழமை | 26.07.2025 | அதிர்வு 356

## நல்லூரான் மகோற்சவம் செவ்வாயன்று ஆரம்பம்



வரலாற்றுச் சிறப்புமிக்க 06



# செம்மணியில் 90 ஐத் தொட்ட மனித என்புத் தொகுதிகள்!

## நேற்று 2 எலும்புக்கூடுகள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின்போது இரண்டு மனித எலும்புக் கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்த ஐந்து மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக் கப்பட்டுள்ளன. 07



## திங்கள் மாலைதீவு பறக்கின்றார் அநுர



மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அநுரகுமார 05

## பாலூட்டும் போத்தல் மீட்கப்பட்ட பகுதியில் குழந்தையின் எலும்புக்கூடு அகழ்ந்தெடுப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து குழந்தைகளுக்குப் பாலூட்டும் போத்தல் அடையாளம் காணப்பட்ட பகுதியில் குழந்தையின் என்புத் தொகுதி ஒன்றும் நேற்று அகழ்ந்து எடுக் கப்பட்டுள்ளது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் 06






அரசு நிறுவனங்களினாலும், பிற தரப்புகளினாலும் மக்களின் மனித உரிமைகள் மீறப்படும் போது அவை குறித்து முறையிடவும், நிவாரணம் பெறவும் உரிய சட்ட ஏற்பாடுகளோடு அமைக் கப்பட்டதுதான் இலங்கை மனித உரிமைகள் ஆணையம்.

ஆனால் தனது வழிகாட்டுதல்களை அரச நிறுவனங்கள், துறைத் தலைவர்கள் உரிய முறையில் பின்பற்றுவதில்லை என்று மனித உரிமைகள் ஆணையமே விசனம் தெரிவித்திருக்கின்றது.

பிணக்குகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணையம் கடந்த ஆண்டில் வழங்கிய பரிந்துரைகள், வழிகாட்டுதல்கள் போன்றவற்றில் 30 வீதமானவை மட்டுமே செயல்படுத்தப்பட்டிருக் கின்றன எனச் சுட்டிக்காட்டும் மனித உரிமைகள் ஆணையம், தனது அறிவுறுத்தல்களை எதிர்த்து மேல்முறையீடு செய்ய முடியாது என்றும், மேல்முறையீடு செய்து விட்டு வாளாவிருப்பதான போக்கும் தவறு என்றும், வழங்கப்பட்ட 06



# செம்மணிப் புதைகுழியில் சவப் பெட்டியில் அடக்கம் செய்யப்பட்ட சடலம் அடையாளம்

## மீளவும் மண் போட்டு மூடப்பட்டது

(பிரபாகரன் டிலக்சன்)

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகத்தின் அடிப்படையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய பகுதியான தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இரண்டிலிருந்து

சட்ட ரீதியாக உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்பட்டு பிரேதப் பெட்டியில் அடக்கம் செய்யப்பட்ட சடலம் ஒன்று அடையாளம் காணப்பட்டது.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதில் ஒரு பகுதியில் நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் கடந்த ஜுலை 2ஆம் திகதி ஆரம்பமாகின. மேலும் அந்தப் பகுதி “தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இரண்டு” என நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 20ஆம் நாள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற நிலையில் தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இரண்டிலிருந்து சட்ட ரீதியாக உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்பட்டு பிரேதப் பெட்டியில் அடக்கம் செய்யப்பட்ட சடலம் ஒன்று அடையாளம் காணப்பட்டது.

அந்தச் சடலம் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய உடற்கூற்றுப் பரிசோதனை செய்யப்பட்டது என்பதைச் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையா நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றதன் அடிப்படையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அது மீளவும் மண் போட்டுப் பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளது.

தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இரண்டில் தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# செம்மணிப் புதைகுழி பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து புகைப்படம் எடுத்தவர்கள் பொலிஸாரால் வெளியேற்றம்

(ந.லோகதயாளன்)

மனிதப் புதைகுழி காணப்படும் செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்துக்குள் அத்துமீறி உள்நுழைந்து புகைப்படம் எடுத்த மதகுரு தலைமையிலான குழுவினரால் சர்ச்சை ஏற்பட்டது.

மனிதப் புதைகுழி காணப்படுவதாக நீதிமன்றத்தால் அடையாளம் காணப்பட்டு அகழ்வுப் பணி இடம்பெறும் இடத்துக்கு நேற்று கத்தோலிக்க மதகுருவின் சிபார்சுடன் கூடிய கடிதம் ஒன்றுடன் உள்நுழைந்து புகைப்படம் எடுத்தவர்களைப் பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றினர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள், அகழ்வுப் பணி இடம்பெறும் இடத்தில் அனுமதியின்றி எடுத்த நிழல் படங்களும் பொலிஸாரால் அழிக்கப்பட்டன.



# தேசபந்துவின் தலைவிதி ஓகஸ்ட் 5 இல் நிர்ணயம்!

## பதவி நீக்கம் தொடர்பில் விவாதம் நடத்தி வாக்கெடுப்பு நடத்த நாடாளுமன்றம் முடிவு



பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய ஓகஸ்ட் 5ஆம் திகதி முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை மேற்படி தீர்மானம் தொடர்பில் விவாதம் நடத்தப்படும். அதன்பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

# தேன் எடுக்கச் சென்ற நபர் யானை தாக்கி உயிரிழப்பு

## திருகோணமலையில் துயரம்



திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தளாய் காட்டுப் பகுதியில் தேன் எடுக்கச் சென்றவர் மீது யானை தாக்கியதில் மேற்படி நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது என்று மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் காட்டுப் பகுதிக்குத் தேன் எடுப்பதற்காக மூன்று பேர் சென்றனர் எனவும், இதன்போது யானை ஒன்று மேற்படி நபர்களைத் தாக்க முற்பட்டபோது மூவரும் வெவ்வேறாகப் பிரிந்து ஓடினர் எனவும், அவ்வேளை ஒருவரை யானை தாக்கியது எனவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

மொரவெவ பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து காட்டுப் பகுதிக்குச் சென்று உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு வந்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யானையின் தாக்குதலில் ஹெலலென – மித்தெனிய பகுதியைச் சேர்ந்த ஜீ.எம்.ரஞ்சித் (வயது 53) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மொரவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மாகாண சபை முறைமையை பலவீனப்படுத்தும் அமைச்சுகள்

## சாணக்கியன் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு

மாகாண சபை முறைமையை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளில் அனைத்து அமைச்சுக்களும் ஈடுபட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அமைச்சரிடம் பல வீதிகள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைத்திருந்தோம். இதில் உள்ள பிரச்சினை என்வென்றால் எமது மாவட்டத்தில் அதிகமான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்டவை, அதேபோன்று பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளும் உள்ளன. ஆனால் இவற்றுக்கான நிதிகளை மத்திய அரசாங்கமே வைத்திருக்கிறது. மாகாண சபைகளுக்கு கீழுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் மத்திய அரசாங்கத்திடம் கேட்க முடியாது. இந்நிலையில் உங்களின் அமைச்சின் கீழ் மாகாண அமைச்சுக்கு ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்ய ஒழுங்குகள் உள்ளனவா?.”– என்றார்.

இதன்போதுபதிலளித்தபோக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன கூறுகையில்,

“வீதிகள் பல வகை உள்ளன. அவற்றில் மாகாண சபைகளுக்கு உரித்தான வீதிகள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. நிதி மற்றும் தொழில்நுட்பம் என்பன கிடையாது. இதனால் அந்த வீதிகளை அபிவிருத்தி செய்ய முடியாத நிலைமைகள் உள்ளன. எனினும் நாங்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக இவ்வாறான வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எடுத்து அதனை அபிவிருத்தி செய்யவும், தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுப்போம்.” என்றார்.

இதனை தொடர்ந்து உரையாற்றிய சாணக்கியன் இராசமாணிக்கம் கூறுகையில்,

“கடந்த வாரத்தில் சுகாதார அமைச்சரிடம் வைத்தியசாலைகள் தொடர்பில் கேட்ட போது மத்திய அரசாங்கம் மாகாண வைத்தியசாலைகளை எடுத்து சிறந்த வைத்தியசாலைகளை அமைக்கப் போவதாக கூறினார். அதேபோன்று நீங்களும் மாகாண வீதிகளை, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எடுத்து செய்யப் போவதாக கூறியுள்ளீர்கள். இதற்கு நிதி இல்லை என்பதே காரணமாகும்.

இந்நிலையில் மாகாண சபைகளை பலவீனமாக்கும் செயற்பாடுகளை எல்லா அமைச்சுகளும் செய்கின்றன. மாகாண சபை முறைகளை பலவீனப்படுத்தாமல் ஏன் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நிதிகளை ஒதுக்க முடியாது.” என்றார்.

# ராஜிதவின் முன் பிணை மனு ஓகஸ்ட் 7 இல் விசாரணைக்கு



தனது முன் பிணை மனுவை நிராகரித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீள பரிசீலனை செய்து தன்னைப் பிணையில் விடுதலை செய்யுமாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வும் திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்து அரசுக்கு 2.63 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தினார் எனக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த 11 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தன்னைக் கைது செய்வதை தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன் பிணை மனு தாக்கல் செய்தார்.

ஆனால், கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இந்த முன் பிணை மனுவைக் கடந்த 18 ஆம் திகதி நிராகரித்தது.

தனது முன் பிணை மனுவை நிராகரித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீள் பரிசீலனை செய்து தன்னைப் பிணையில் விடுதலை செய்யுமாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்திகா காலிங்கவம்ச முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி, ராஜித சேனாரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட முன் பிணை மனுவைக் கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி நிராகரித்திருந்தார். ஆனால், இந்த முன் பிணை மனுவை நிராகரிப்பதற்கான சாட்சியங்களை நீதிவான் சமர்ப்பிக்கவில்லை எனக் கூறினார்.

இதனைக் கருத்தில்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்திகா காலிங்கசவம், இந்த மனு தொடர்பில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கோரி உத்தரவிட்டார்.

அத்துடன் இந்த மனு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.


## தமிழ்த் தேசிய வீரர்கள் தினம்

ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்களை நினைவுகூரும்

42 ஆம் ஆண்டு நினைவேந்தல்

காலம் :- 26 . 07. 2025
நேரம் :- மாலை-03 . 00 மணி

இடம் :- தந்தை செல்வா நினைவு கேட்போர் கூடம்
யாழ் மத்திய கல்லூரி வளாகம்

அன்புரிமையுடன் அழைக்கின்றோம்!

**அன்புடையீர்**

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபக தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி மூத்த போராளிகள் ஜெகன், தேவன், நடேசுதாசன் உட்பட 53 ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்களையும் பொது மக்களையும் அஞ்சலிக்கும் 42 ஆவது ஆண்டு நினைவேந்தல்

தலைமை :-

திரு. குருசுவாமி சுரேந்திரன்

சிறப்பு விருந்தினர் :-

திரு. வீ . தனபாலசிங்கம் மூத்த ஊடகவியலாளர்

விருந்தினர்கள்

கௌரவ சி வி கே சிவஞானம் அவைத் தலைவர் வடமாகாண சபை / பதில் தலைவர் இலங்கை தமிழ் அரசுக் கட்சி

கௌரவ . செல்வம் அடைக்கலநாதன் .பா.உ- தலைவர் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (DTNA)

கௌரவ . கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பா.உ - தலைவர் தமிழ் தேசிய பேரவை

திரு . தர்மலிங்கம் சித்தாத்தன் தலைவர் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DTNA)

திரு . சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைவர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (DTNA)

திரு . சி. நவீந்திரா [வேந்தன்] தலைவர் ஜனநாயக போராளிகள் கட்சி (DTNA)

திரு . முருகேசு சந்திரகுமார் தலைவர் சமத்துவக் கட்சி (DTNA)

நிகழ்வுகள்
அகவணக்கம், ஈகைச் சுடரேற்றல் , மலரஞ்சலி
தலைமையுரை
விருந்தினர் உரை
சிறப்புரை
நன்றியுரை

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
தலைமைச் செயலகம்
யாழ் மாவட்டம்


## திங்கள் மாலைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திஸாநாயக்க நாளைமறுதினம் திங்கட்கிழமை உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு மாலைதீவுக்குச் செல்லவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் மாலைதீவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமைகின்றது.

1965 ஆம் ஆண்டு ஜுலை 29 ஆம் திகதி இரு நாடுகளுக்கும் இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்து 60 ஆவது ஆண்டு நிறைவை இந்த ஆண்டு கொண்டாடுவதால், இந்த உத்தியோகபூர்வ விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துதல், வர்த்தகம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பில் இரு நாட்டு தலைவர்களும் கலந்துரையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாலைதீவு – இலங்கைக்கு இடையிலான சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒப்பந்த பேச்சுவார்த்தையும் நடத்தப்படவுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழிகாட்டுதல்கள் தவறாமல் பின்பற்றப்படுவதற்கு அரசு நிறுவனங்கள் கடமைப்பட்டுள்ளன என்றும், அரச நிறுவனங்களுக்கு எச்சரிக்கைச் சுற்று நிரூபம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றது.

மனித உரிமைகள் ஆணையத்தின் பரிந்துரைகளை உதாசீனப்படுத்திய அரச நிறுவனங்களில் இலங்கைக் கடற்படையும் ஒன்று எனக் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணை தீவுக்குச் செல்வதற்கு குடிமகன் ஒருவருக்கு இலங்கைக் கடற்படை தடைவிதித்ததற்கு எதிராக அவர் மனித உரிமைகள் ஆணையத்திடம் முறையிட்டு இருந்தார். அதனை விசாரித்த மனித உரிமைகள் ஆணையம், குடிமக்கள் அந்தப் பகுதிக்குள் நுழைவதற்குக் கட்டுப்பாடுகளை விதிப்பதை தவிர்க்கும்படியும், அதன்படி வடமத்திய கடற்படை பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள கடற்படையினருக்கு எழுத்து மூல அறிவித்தல்களை வழங்கவும் மனித உரிமைகள் ஆணையம் கடற்படைக்கு உத்தரவிட்டிருந்தது. ஆயினும் 'தேசிய பாதுகாப்பு' என்று கூறி கடற்படை அந்த பரிந்துரைகளை தூக்கிக் குப்பையில் போட்டு விட்டு அடாவடித்தனமாகச் செயல்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தொடர்ந்து இத்தகைய உதாசீனம் காட்டப்படுமானால் மனித உரிமைகள் ஆணையம் பதில் நடவடிக்கை எதையாவது எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

என்ன செய்யப் போகின்றது மனித உரிமைகள் ஆணையம்? அதற்கே தனது உரிமைகளைப் பாதுகாக்க முடியாது என்றால் பொதுமக்களின் மனித உரிமைகளை அது எப்படி பாதுகாக்க போகின்றது என்பது நியாயமான கேள்விதான்.

* * *

உள்ளூராட்சி சபைகளில் குறிப்பிடத்தக்க பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக வேட்பு மனுக்களில் கணிசமான வீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளூராட்சி சபைச் சட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பட்டியல் மூலம் தெரிவாகும் உறுப்பினர்களிலும் கணிசமான வீதம் மகளிருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற இறுக்கமான சட்ட நிலைப்பாடும் இந்த நோக்கத்துக்காகக் கொண்டுவரப்பட்டதுதான்.

ஆயினும் இவற்றை எல்லாம் தாண்டி, இந்தத் தடவை மொத்தம் 49 உள்ளூராட்சி சபைகளில் எந்த உறுப்பினரும் மகளிர் இல்லை என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முந்தைய உள்ளூராட்சி சபைகளில் – அதாவது 2018 இல் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளில் – ஆக 16 இல் மட்டுமே பெண்கள் பிரதிநிதித்துவம் இல்லாத நிலைமை காணப்பட்டது. அது இம்முறை மூன்று மடங்காகி 49 சபைகளில் பெண் உறுப்பினர்களே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் தலா ஒரு சபையிலும், கண்டியில் மூன்று சபைகளிலும், நுவரெலியாவில் இரண்டு சபைகளிலும் மகளிர் தெரிவாகவில்லை. தென் மாகாணத்தில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தலா ஒவ்வொரு சபையிலும் மகளிர் தெரிவாகவில்லை.

வடக்கில் யாழ் மாவட்டத்தில் நான்கு சபைகளிலும், மன்னாரில் ஒன்றிலும், வவுனியாவில் உள்ள ஐந்து சபைகளில் மூன்றிலும், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா இரு சபைகளிலும் மகளிர் தெரிவாகவில்லை.

அம்பாறையில் ஏழு சபைகளிலும், திருகோணமலையில் நான்கு சபைகளிலும் பெண் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை.

சட்டம் கொண்டு வந்து மகளிருக்கு இத்தனை வீதம் ஒதுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியும் கூட மக்கள், மகளிர் இல்லாத சபைகளைத் தெரிவு செய்திருக்கிறார்கள் என்பது அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாக உள்ளது.

# குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு 3,000 வீடுகளை நிர்மாணிக்கும் பணி



குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக 3,000 புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் புதிய வீடுகளின் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்யவுள்ளதாக நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள கிராம உத்தியோகத்தர்கள் மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களின் குடும்பங்களுக்காக இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இதற்காக மக்களின் உதவிகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரித்துள்ளார்.

# 40 நாடுகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசா வழங்குவதற்குத் திட்டம்

## அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு

சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் நோக்கில், 40 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசா வழங்கும் திட்டத்தை இலங்கை அரசு விரிவுபடுத்த முடிவு செய்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா வருகைகளை அதிகரித்து, வருவாய் பெருக்குவதற்கான முக்கியமான நடவடிக்கையாக கருதப்படுகிறது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



இத்திட்டத்தின் கீழ் தற்போது அனுமதி பெற்ற நாடுகளின் பட்டியலையும் விரைவில் வெளியிட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## பாலூட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதி தடயவியல் அகழ்வாய்வுத் தளம் இரண்டு என நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 7ஆம் நாள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றபோது குழந்தைகளுக்குப் பாலூட்டும்போத்தல்ஒன்றும்,வெள்ளைநிறஆடை ஒன்றும் அடையாளம் காணப்பட்டிருந்தன.

இந்நிலையில், அந்தப் பகுதியில் இருந்து குழந்தையின் என்புத் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டு நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

## நல்லூரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனை முன்னிட்டு ஆலய வெளிவீதியைச் சுற்றி சிவப்பு வெள்ளைத் துணிகள் கட்டப்பட்டு, திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் மகோற்சவ திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

மகோற்சவ திருவிழாக்களின் 10ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதியும், 22ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதியும், 24ஆம் திருவிழாவான தேர்த் திருவிழா ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலையும், மறுநாள் 22ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று, மாலை கொடியிறக்கம் நிகழ்த்தப்படுவதோடு, மகோற்சவம் நிறைவு பெறும்.







## செம்மணியில் 90...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 20ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது இரண்டு மனித எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்த ஐந்து மனித என்புத் தொகுதிகள் நேற்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.



செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 90 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 81 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் சித்துப்பாத்தி இந்து மயான எல்லையைச் சூழ ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் முதல் கட்டமாக நேற்று துப்பரவுப் பணிகள் இடம்பெற்றன. எதிர்வரும் நாட்களில் ஸ்கான் பரிசோதனை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் நேற்று அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி இருந்தனர்.










# வர்த்தகக் கவுன்ஸிலின் உலகளாவிய சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்பு

கொழும்பு ஷாங்க்ரிலா ஹோட்டலில் நேற்று காலை நடைபெற்ற இலங்கை வர்த்தக கவுன்ஸிலின் உலகளாவிய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் ஆரம்ப விழாவில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்டார்.

உலகம் முழுவதிலுமுள்ள இலங்கை வர்த்தகர்களை ஒரே இடத்தில் இணைக்கும் மேடையாக இலங்கை வர்த்தக கவுன்ஸிலின் உலகளாவிய சம்மேளனம் செயல்படுகிறது.

“உலகளாவிய இலங்கை வர்த்தகங்களை ஒன்றிணைத்து – முன்னோக்கி” என்ற தொனிப்பொருளில் நேற்றும், இன்றும் நடைபெறும் இந்த மாநாட்டில், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் இந்தியா உள்ளிட்ட 15 நாடுகளைச் சேர்ந்த தொழில்முயற்சியாளர்கள் இணைந்துள்ளனர்.

உலகளாவிய வர்த்தக உறவுகளை விரிவுபடுத்துதல், புதிய முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் உலகெங்கிலும் உள்ள இலங்கை தொழில்முனைவோரின் ஆதரவுடன் நாட்டின் பொருளாதாரத்திற்கு தீவிரமான பங்களிப்பைப் பெறுவது என்பன தொடர்பில் கலந்துரையாடல் தளமொன்று இம்முறை மாநாட்டின் போது ஏற்படுத்தப்படும்.

இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளதால், அச்சமின்றி எமது நாட்டிற்கு வந்து முதலீடு செய்யுமாறு வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் வர்த்தக சமூகத்திற்கு அழைப்பு விடுத்தார்.

அந்த அழைப்பிற்கு வருகை தந்திருந்த வர்த்தக சமூகத்தினர் சாதகமாக பதிலளித்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கவுன்ஸில் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி அடையாள ரீதியாக கௌரவிப்பு விருதுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், வெளிநாட்டுத் தூதுவர்கள் , இலங்கை வர்த்தகக் கவுன்சிலின் உலகளாவிய சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுகாதார மேம்பாடு சாத்தியமா?

பெரும்பாலான வளர்ந்த - வளர்ந்து வருகின்ற - ஏனைய நாடுகளைப் போல இலங்கையிலும் மருத்துவ, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுகாதார சேவை அனைத்து குடிமக்களுக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

நாட்டின் அரசாங்கத்தினால் சுகாதார அமைச்சகம் ஊடாக இந்தச் சேவை மக்களுக்குக் கிட்டுகின்றது.

சுகாதார சேவையில் தனியார் துறை கணிசமான பங்களிப்பை வழங்கினாலும், இலங்கையின் ஒவ்வொரு குடிமகனுக்கும் மருத்துவ சேவையை இயன்ற வரை இலவசமாக வழங்கும் முயற்சியில் அரசாங்கங்கள் தொடர்ந்து அதிக ஈடுபாடு காட்டி வருகின்றன.

ஆயினும், நாட்டின் சுகாதாரத் துறை தொடர்பாக எழுந்துள்ள புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய விதத்தில் சுகாதார மருத்துவத்துறை தன்னை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்க, கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் மாறிவரும் மக்கள் தொகை மற்றும் சுகாதார சூழலுக்கு ஏற்ப இலங்கையின் சுகாதார அமைப்பு தன்னை மாற்றி அமைக்க வேண்டிய அவசர தேவை ஏற்பட்டிருப்பதாக அவர் வலியுறுத்தினார்.

‘சவாலான காலங்களில் சுகாதாரப் பராமரிப்பில் சுகாதார சமத்துவம்’ என்ற கருப்பொருளின் கீழ் கொழும்பில் சர்வதேச மருத்துவ வல்லுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கு பற்றிய சர்வதேச மாநாடு ஒன்றில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

வயதானவர்களை அதிகம் கொண்ட நாடாக இலங்கை மேம்பட்டு வருகின்றது. 2041 ஆம் ஆண்டளவில் நான்கு குடிமக்களில் ஒருவர் முதியவராக இருப்பார் என்று கணிப்புகள் கூறுகின்றன. அதேசமயம் நாட்டின் மக்கள் தொகை 2050ஆம் ஆண்டில் இரண்டரைக் கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மக்கள் தொகை மாற்றம் சுகாதார சேவை வளங்களில் பெரும் மாற்றத்தைக் கோருகின்றது என்று டாக்டர் அனில் ஜாசிங்க அந்த மாநாட்டில் சுட்டிக்காட்டினார்.

ஐந்து தசாப்தங்களுக்கு முன்பு நாங்கள் வழங்கிய சுகாதார சேவைகள் இனி போதுமானவையாக இருக்கா என்றார் அவர்.

வயதான குடிமக்களின் எண்ணிக்கை உயர்வு, தொற்றாத நோய்களின் அதிகரிப்பு, காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் மற்றும் அதிகரித்து வரும் தொற்றுக்களின் அச்சுறுத்தல்கள் வரை பல்வேறு சிக்கலான சவால்களை சுகாதார மருத்துவத்துறை புதிதாக எதிர்கொண்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டுவது முற்றிலும் உண்மை.

இந்த நெருக்கடிகள் சுகாதார சேவைத் துறையில் தேவைப்பாடுகளை மாற்றி அமைத்து வருகின்றமை கண்கூடாகத் தெரியும் விடயம்.

நோய்க்கு சிகிச்சை அளிப்பதைத் தாண்டி, தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கும், சமூக மீள்திறனைப் பேணுவதற்கும், உதவக்கூடிய ஒரு சுகாதார கட்டமைப்பு மாற்றத்துக்கு அனில் ஜாசிங்க அழைப்பு விடுத்தார்.

நாட்டின் வளத்தின் பெரும் பகுதி சுகாதாரத் துறைக்கு செலவிட வேண்டிய இந்தக் காலகட்டத்தில், சுகாதாரத் துறையை அதன் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப மேம்படுத்தக்கூடிய வலிமை நாட்டுக்கும் அரசுக்கும் உண்டா என்பதுதான் இப்போது உள்ள கேள்வி.

வெளிநாடுகளிடம் வாங்கிய கடன்களை மீளச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையில் அல்லாடும் நாடு தன் சுகாதாரத் துறையை எப்படி மேம்படுத்தப் போகின்றது? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!



# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

நாட்டில் இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 13 இலட்சத்து 13, 232 சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இது 21.4 சதவீத அதிகரிப்பு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்த மாதத்தின் முதல் 23 நாட்களில் மாத்திரம் ஒரு லட்சத்து 45,188 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில், இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளதுடன், அவர்களின் எண்ணிக்கை 27,786 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரித்தானியா, நெதர்லாந்து, சீனா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

# சில மருந்தகங்களின் உரிமங்கள் நிறுத்தம்



நாடு முழுவதும் 82 மருந்தகங்களின் உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், இந்த மருந்தகங்கள் தேவையான தரநிலைகளைப் பேணாத காரணத்தின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்

இந்தநிலையில், நடப்பு ஆண்டின் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் ஜுலை 18 திகதி வரை, தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபைக்கு 2,039 உரிமப் புதுப்பிப்பு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இவற்றில் 1,820 மருந்தகங்களுக்கு புதிய உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், 219 மருந்தகங்களின் உரிமங்கள் புதுப்பிக்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இவற்றில் 137 மருந்தகங்களில் முழுநேர மருந்தாளுநர்கள் நியமிக்கப்படாததால், அவர்கள் நியமிக்கப்படும் வரை உரிமங்கள் புதுப்பிக்கப்படாது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



# தமிழரசுக் கட்சிக்குள் ‘முடிந்து விடும்’ வேலையை கஜேந்திரகுமார் செய்கிறார் என சி.வீ.கே. சீற்றம்

**(எஸ்.நிதர்ஷன்)**

தமிழரசுக் கட்சிக்குள் முடிந்து விடும் வேலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செய்கிறார் எனத் தமிழரசின் பதில் தலைவர் சி.வீ. கே.சிவஞானம் கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்றை அவர் நடாத்தியிருந்தார். இதன் போது ஜெனிவாவிற்கு கடிதம் அனுப்ப கஜேந்திரகுமார் முன்னெடுத்துள்ள முயற்சி தொடர்பிலான கேள்விக்குப் பதிலளிக்கையிலையே. அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஜெனிவாவிற்கு கடிதம் ஒன்று ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. அதில் பல தரப்புக்களுடன் நாங்களும் கையொப்பமிட்டு அந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ள நிலையிலையே மீளவும் ஒரு கடிதம் அனுப்ப முயற்சி நடக்கிறது.

அவ்வாறு அந்த கடிதத்தில் நான் கையொப்பம் வைத்த பின்னர் எமது கட்சியின் செயலாளரான சுமந்திரன் வெளிநாட்டில் நிற்கின்றமையால் என்னிடம் தாம் கையெழுத்து வாங்கி விட்டார் என கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கிறார்.

உண்மையில் அவரது இந்தக் கருத்தை எமது கட்சிக்குள் “முடிந்து விடும்“ ஒரு நடவடிக்க்சியாகத்தான் பார்க்கிறேன். சுமந்திரன் இல்லாமல் என்னிடம் கையெழுத்து வாங்கியதான அந்தக் கருத்து எங்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக கூறப்படுவதாகவே பார்க்கிறேன்.

அவ்வாறு எங்களுக்குள் முடிந்து விடுகிற வேலையை அவர் பார்க்கத் தேவையில்லை. நாங்கள் இரகசியமாக எதனையும் செய்வதில்லை. கட்சிக்குள் கலந்து பேசித்தான் முடிவுகளை எடுத்து செயற்படுவோம் என்பதை வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

இனத்திற்காக ஒற்றுமையாக சிலதைச் செய்ய நாங்கள் இணங்கி வந்திருக்கிறோம். ஆனாலும் கூட தமிழரசுக் கட்சியை எந்நேரமும் விமர்சித்தும், கண்டித்தும், ஏளனம் செய்து கொண்டும் இருக்கையில் மீண்டும் மீண்டும் ஒற்றுமை என கூறி வரச் சொன்னால் எப்படிப் போக முடியும்?

தமிழரசு மீது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரின் குற்றச்சாட்டுக்கள் அபத்தமானவை. எங்களுக்கு எதிராக திட்டமிட்டே பொய்யான பரப்புரைகளை அவர் செய்து வருகிறார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியானது சர்வதேச விசாரணையை கைவிட்டு உள்ளகப் பொறிமுறைமை கோருவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகிற குற்றச்சாட்டு அபத்தமானது.

செம்மணி அகழ்வு தொடர்பில்தான் ஜனாதிபதிக்கு நாங்கள் கடிதம் அனுப்பியிருந்தோம். ஆட்சியில் உள்ள இந்த அரசாங்கம் இப்போது செய்ய வேண்டிய விடயங்களைத்தான் அதில் குறிப்பிட்டிருந்தோம்.

அந்தக் கடிதமும் பகிரங்கமாக வெளிவந்ததும் இருக்கிறது. அதில் ஏதாவது ஓர் இடத்திலேனும் நாங்கள் உள்ளக விசாரணையை கோரவும் இல்லை.

அத்தகைய உள்ளக விசாரணையை நாங்கள் ஒருபோதும் வலியுறுத்தவில்லை. அதுமாத்திரமல்லாமல் சர்வதேச விசாரணை வேண்டாமென்றோ சொல்லவும் இல்லை.

ஆகவே பொய்யான பரப்புரைகளை பரப்புவதைவிடுத்து அதன் உண்மைத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். இதனை விடுத்து பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்துவது அபத்தமானது.

குறிப்பாக சர்வதே விசாரணையை வலியுறுத்தி தமிழ்க் கட்சிகள் ஐ.நாவிற்கு அனுப்பிய கடிதத்தில் நாங்களும் கையொப்பம் வைத்துள்ளோம்.

இவ்வாறிருக்கயில் அரசியல் லாபகங்களுக்காக எங்கள் மீது திட்டமிட்டு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது ஏற்றுக் கொள்ள முடியாது. அத்தகைய குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கிறோம்.

கடந்த தேர்தல் காலங்களிலும் எங்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தினார்கள். ஆனால் இவர்களது பொய்யான குற்றச்சாட்டுக்களை மக்களும் ஏற்கவில்லை. அதனால் தங்களது முழுமையான ஆதரவை எங்களுக்கே மக்கள் வழங்கியிருக்கிறார்கள்.

எமது மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைய நாம் எப்போதும் செயற்படுவோம். அதைவிடுத்து கஜேந்திரகுமார் நினைப்பது போன்று செயற்பட முடியாது. – என்றார்.

# தவறவிடப்பட்ட தங்க ஆபரணம்

கீரிமலை அம்மாச்சி உணவகத்தில் தவறவிடப்பட்ட தங்க ஆபரணம் ஒன்று வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைமை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவற விட்டவர்கள் அலுவலக நேரத்தில் நேரடியாக சமுகமளித்து தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

# கறுப்பு ஜுலைக்கு ஐ.தே.கட்சியேதான் காரணம் செம்மணி விசாரணைக்கு அரசு பூரண ஒத்துழைப்பு!

## பிரதியமைச்சர் சுந்தலிங்கம் பிரதீப் தெரிவிப்பு

**(பொகவந்தலாவ நிருபர் எஷ்.சதீஷ்)**

கறுப்பு ஜுலைக் கலவரத்துக்கு பின்னால் யார் இருந்தார்கள் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும். எனினும் சிலர் அதனை மூடிமறைத்து வரலாற்றை மாற்றி எழுத முயற்சி செய்கிறார்கள் என பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

ஹற்றன் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கறுப்பு ஜுலையின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும். கடந்த கால வரலாற்றை சிலர் மூடி மறைக்க முயற்சி செய்கிறார்கள். 83 ஜுலைக் கலவரத்திற்கு பின்னால் ஜே.வி.பி. இருந்த தாகக் கட்டுக்கதைகளை அவிழ்த்துவிடும் அவர்களுக்கு ஐக்கிய தேசிய கட்சியே அக்கலவரத்திற்குப் பிரதான காரணம் என்பது தெரியாமல் இல்லை. ஒரு சிலர் இதனை மூடி மறைத்து அற்ப அரசியல் இலாபத்துக்காக கடந்த கால வரலாற்றை மாற்றி எழுத முயற்சிக்கிறார்கள்.

சரியான விடயங்களை செவிசாய்க்காததன் காரணத்தினால்தான் இன்று அரசியல்வாதிகள் பேசுபவை எல்லாம் செய்தியாக வெளிவருகின்றன. 1983



ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற இனக்கலவரம் அப்போது பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆரின் அரசாங்கத்தினால் கட்டவிழ்க்கப்பட்டது.

அந்தக் கலவரம் அப்போதுள்ள ஊடகங்களால் ஜே.வி.பியினால் தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட கொடூரம் எனத் திசைதிருப்பப்பட்டது.

மலையகத்தில் இருக்கின்ற சில கட்சிகள் செம்மணி புதைக்குழி சம்பவத்திற்கு எதிராக போராட்டம் நடத்துகின்றனர். அந்த செம்மணி புதைக்குழி சம்பவம் தொடர்பான பூரண விசாரணைக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருக்கிறது. அதற்காக போராடுகின்ற கட்சிகள் அன்று தமிழர்களைக் கொன்று குவித்த ஜக்கிய தேசிய கட்சியினுடைய துணைக் கட்சிகளோடு இன்று ஒன்றாக கைகோர்த்து செயற்படுவது என்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இந்த இனவாதத்தையும் மதவாதத்தையும் அதிகாரத்திற்காகவும் மதவாதத்திற்காகவும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இனிவரும் காலங்களில் இந்த நாட்டில் இனக் கலவரத்தை ஏற்படுத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது. கடந்த காலங்களில் இருந்த இந்த அரசியல்வாதிகள் தங்களின் பதவிகளுக்காக மக்களை பலிகொடுக்கின்ற செயற்பாடு கடந்த காலங்களில் காணப்பட்டது.

வெகுவிரைவில் உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பான தகவல்கள் வெளிவருகின்ற போது பல உண்மைகள் இவ்வுலகிற்கு அம்பலமாகும். இவர்கள் அதிகாரத்திற்காக மக்களைப் பாரிய அளவிலான அழிவு பாதையில் கொண்டு சென்றார்கள் அது மலையகத்திலும் இடம் பெற்றது

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு மலையக மக்கள் அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே மக்கள் வழங்கிய அங்கீகாரத்திற்கு அமைய என்ன நோக்கத்தைக் கூறி நாங்கள் ஆட்சிக்கு வந்தோமோ அந்த உறுதிமொழிகளை வெகுவிரைவில் நிறைவேற்றிக் காண்பிப்போம். – எனக் குறிப்பிட்டார்.

# தொலைந்த அரைப் பவுண் கைச்சங்கிலியை கண்டெடுத்தவர் உரியவரிடம் ஒப்படைத்தார்





**(எஸ்.கீதபொன்கலன்)**

மூதூர் பொழுது போக்கு பூங்காவில் காணாமல் போன அரைப் பவுண் கைச்சங்கிலியை கண்டெடுத்தவர், அதனை நேற்று உரியவரிடம் ஒப்படைத்துள்ளார்.

தம்பலகாமத்தைச் சேர்ந்த புதிதாகத் திருமணமான தம்பதியினர், மூதூர் பொழுது போக்குப் பூங்காவிற்கு வந்திருந்த போது அவர்களின் கைச்சங்கிலி காணாமல்போயிருந்தது. இது பற்றி அவர்கள் மூதூர் பிரதேச சபைக்கு தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் பூங்காவில் நேற்று வெள்ளிக்கிழமை காலை உடற்பயிற்சியில் ஈடுபட்ட சிலரால் தங்க கைச்சங்கிலி கண்டெடுக்கப்பட்டு அது மூதூர் பிரதேச சபையில் ஒப்படைக்கப்பட்டது.

இதனையடுத்து மூதூர் பிரதேச சபையின் தவிசாளர், உதவித் தவிசாளர் முன்னிலையில் நகையை கண்டெடுத்தவர்கள் உரியவரிடம் அதனை நேற்றே ஒப்படைத்தனர்.




# சுவிஸில் கறுப்பு ஜுலை கவனவீர்ப்பு

கறுப்பு ஜுலையின் 42ஆவது ஆண்டு நினையொட்டிய கண்டன ஆர்ப்பாட்டம் சுவிஸில் முன்னெடுக்கப்பட்டது.

சுவிஸ் தமிழர் அரசியல் துறை, தமிழ்ப் பெண்கள் அமைப்பு, தமிழ் இளையோர் அமைப்பு போன்றவற்றின் ஏற்பாட்டில் 23.07.2025 அன்று பேர்ண் Europa platz முன்றிலில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கறுப்பு ஜுலை சார்ந்தும், தொடர்ச்சியாக இன்றும் தமிழர் தாயக பகுதிகளில் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட இனவழிப்பு தொடர்பாகவும், யாழ் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக நீதியான சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், தமிழின அழிப்புக்கான நீதி விசாரணைகளின் அவசியத்தையும் வலியுறுத்தி வேற்றின மக்களுக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இது தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன. தமிழர்களுக்கு எதிராக திட்டமிட்டு நடாத்தப்பட்ட தமிழின அழிப்பின் பாகமான கறுப்பு ஜுலை 42 ஆம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, இனப்படுகொலையில் உயிரிழந்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக தொடரும் தமிழின அழிப்புக்கு சர்வதேச நீதி கோரியும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மக்கள் தங்கள் கோரிக்கைகளை பதாதைகள் மூலம் முன்வைத்தனர்.












# மேலதிக அரச அதிபர்கள் இருவர் மன்னார் மாவட்டத்திற்கு நியமனம்

**(ந.லோகதயாளன்)**

மன்னார் மாவட்டத்திற்கு நிர்வாகம் மற்றும் காணி விவகாரங்களுக்குப் பொறுப்பாக மேலதிக அரசாங்க அதிபர்கள் நேற்றைய தினம் பொது நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய மனோகரன் பிரதீப் மேலதிக அரசாங்க அதிபர் – நிர்வாகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

2012 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து, 2013 தொடக்கம் 2015 வரை உதவி பிரதேச செயலாளராக மாத்தளை மாவட்டம் ரத்தோட்டை பிரதேச செயலகத்திலும், 2015 முதல் 2020 வரை உதவி பிரதேச செயலாளராக கண்டாவளைப் பிரதேச செயலகத்திலும், 2020 தொடக்கம் பிரதேச செயலாளராக மன்னாரிலும் பணியாற்றுகின்றவர் இவர்.





இதேபோன்று மேலதிக அரச அதிபர் – காணி பதவிக்கு கீ.பீட் நிஜாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 2013 இல் இருந்து 2020-08-09 வரை திருகோணமலை உதவி காணி ஆணையாராகவும் (மாகாணங்களுக்கு இடைப்பட்டது), 2020-08-10 இருந்து 2021-01-19 வரை முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளராகவும், 2021-01-20 இருந்து 2021-02-28 வரை மன்னாரில் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளராகவும் பணியாற்றியவர்.

2021-03-01 முதல் அவர் மடுப் பிரதேச செயலாளராகப் பணியாற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# அநுராதபுரத்தில் பஸ்ஸும் காரும் நேற்று மாலை நேருக்கு நேர் மோதிய விபத்தில் பலர் படுகாயம்





**(உடப்பு க.மகாதேவன்)**

அநுராதபுரம் மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் பாதெனிய இரண்டாம் கட்டைப் பிரதேசத்தில் பஸ் ஒன்றும் கார் ஒன்றும் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நேருக்கு நேர் மோதிய விபத்தில் பலர் படுகாயமடைந்தனர்.

மொனராகலைச் சேர்ந்த காரில் பயணித்தவர்கள் மற்றும் பஸ்ஸில் பயணித்த பலர் சிகிச்சைக்காக துரிதமாக அருகிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.





# ராஜஸ்தானில் அரச பாடசாலையின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 6 மாணவர்கள் உயிரிழப்பு

## 32 பேர் காயம்

ராஜஸ்தானின் ஜலாவர் மாவட்டத்தில் உள்ள அரசு இடைநிலைப் பாடசாலை ஒன்றின் மேற்கூரை இடிந்து விழுந்ததில், 6 மாணவர்கள் உயிரிழந்தனர். 32 பேர் காயமடைந்தனர்.

ஜலாவர் மாவட்டம், தங்கிபுரா காவல் எல்லைக்கு உட்பட்ட பிப்லோட் கிராமத்தில் இயங்கி வரும் இடைநிலை அரசு பாடசாலையில் 6 மற்றும் 7 ஆம் வகுப்பு மாணவர்கள் படித்து வருகின்றனர். நேற்று வழக்கம்போல் பாடசாலை கூடி, காலையில் இறைவணக்கம் பாடிக் கொண்டிருக்கும்போது பாடசாலை கட்டடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்துள்ளது.

இதில், இடிபாடுகளில் மாணவர்கள் பலர் சிக்கினர். ஆசிரியர்கள் மற்றும் கிராம மக்கள் இணைந்து மேற்கொண்ட மீட்புப் பணி மூலம் பல மாணவர்கள் மீட்கப்பட்டுள்ளனர். எனினும் இந்த விபத்தில் 6 மாணவர்கள் உயிரிழந்தனர் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய தங்கிபுரா பொலிஸ் நிலைய அதிகாரி விஜேந்திர சிங்,

“4 மாணவர்கள் உயிரிழந்துவிட்டனர். 32 பேர் காயமடைந்துள்ளனர். 2 பேர் மிக மோசமாக காயமடைந்துள்ளனர். காயமடைந்த மாணவர்கள் ஜலாவரில் உள்ள எஸ்.ஆர்.ஜி. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காலை 7.45 மணி அளவில் இந்த விபத்து நேரிட்டுள்ளது. 6 மற்றும் 7 ஆம் வகுப்பு மாணவர்களின் வகுப்பறைகளின் மேற்கூரை இடிந்து விழுந்துள்ளது.” என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மோசமாக காயமடைந்த இரண்டு மாணவர்களும் உயிரிழந்த நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் முதலவர் பஜன்லால் ஷர்மா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“பாடசாலை மேற்கூரை இடிந்து விழந்த சம்பவம் மிகவும் வலியை தரக்கூடிய சோகமான சம்பவம். காயமடைந்த சிறுவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படுவதை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. உயிரிழந்த மாணவர்களின் ஆன்மா சாந்தி அடையவும் அவர்களின் குடும்பத்தினர் இந்த இழப்பை தாங்குவதற்கான வலிமையை பெறுவதற்கும் கடவுளை வேண்டுகிறேன்.” என தெரிவித்துள்ளார்.

இந்த விபத்துக்கு குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் ஆழந்த வேதனையைத் தெரிவித்துள்ளனர்.

# ரிதன்யா கணவர் குடும்பத்தினர் பிணை மனு: பொலிஸ் பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

வரதட்சணை கொடுமையால் திருப்பூரை சேர்ந்த புதுமணப்பெண் ரிதன்யா தற்கொலை செய்து கொண்ட வழக்கில் பிணை கோரி அவரது கணவர், மாமனார், மாமியார் ஆகியோர் தாக்கல் செய்த மனு குறித்து பொலிஸார் பதிலளிக்க வேண்டுமென சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் திருமணமான இரண்டரை மாதங்களில் புதுமணப் பெண் ரிதன்யா விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

கணவர் கவின்குமார், மாமனார் ஈஸ்வர மூர்த்தி, மாமியார் சித்ரா தேவி ஆகியோர் வரதட்சணை கேட்டு, உடல் மற்றும் மனரீதியாக கொடுமைப்படுத்தி



னார்கள் என இறப்பதற்கு முன்பு தனது தந்தைக்கு ரிதன்யா குரல் பதிவு அனுப்பியிருந்தார்.

இந்த வழக்கில் கணவர் கவின்குமார், மாமனார் ஈஸ்வர மூர்த்தி, மாமியார் சித்ரா தேவி ஆகியோர் கைது செய்யப்பட்ட நிலையில் மூவரின் பிணை மனுவை திருப்பூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

இதனையடுத்து, மூவரும் பிணை கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர். இந்த மனு நீதிபதி, எம்.நிர்மல் குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மூவருக்கும் பிணை வழங்க எதிர்ப்பு தெரிவித்து மனுத்தாக்கல் செய்ய உள்ளதாக ரித்ன்யாவின் தந்தை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பொலிஸ் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், மனு குறித்து பதிலளிக்க அவகாசம் வேண்டுமென கோரிக்கை வைத்தார். இதனையடுத்து, பொலிஸ் பதிலளிக்க அவகாசம் அளித்த நீதிபதி வழக்கை ஜூலை 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

# தாய்லாந்து – கம்போடியா மோதலால் பெரும் பதற்றம்!

## முகாம்களில் 1,38,000 மக்கள் தஞ்சம்





தாய்லாந்து – கம்போடியா இடையே நடைபெற்று வரும் இராணுவ மோதல் காரணமாக எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, எல்லை பகுதியில் வசிக்கும் இரு நாடுகளைச் சேர்ந்த மக்களும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து வருகின்றனர். தாய்லாந்து எல்லையில் இருந்து 1,38,000 பேர் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்டை நாடுகளான தாய்லாந்து – கம்போடியா இடையே நீண்ட காலமாக எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. தாய்லாந்தின் சுரின் மாகாண எல்லையில் உள்ள தா மியூன் தோம் எனும் இந்து கோயலை மையமாக வைத்து இந்த எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. இந்த கோயில், தங்கள் நாட்டுக்குச் சொந்தமானது என கம்போடியா கூறி வரும் நிலையில், தாய்லாந்து அது தங்கள் நாட்டுக்கு உரியது என உரிமை கோரி வருகிறது.

இந்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே எல்லையில் மீண்டும் பதற்றம் அதிகரித்து இராணுவ மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த மோதல் காரணமாக, தாய்லாந்தின் எல்லையோர மக்கள் 1,38,000 பேர் தங்கள் பகுதியில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். இவர்களில், பலர் அரசு ஏற்படுத்தி உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இரு நாட்டு இராணுவத்துக்கு இடையேயான மோதல் காரணமாக தாய்லாந்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில், 14 பேர் பொதுமக்கள் என்றும், ஒருவர் இராணுவ வீரர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 46 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் இவர்களில் 15 பேர் இராணுவ வீரர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ மோதலுக்கு கம்போடியா தான் காரணம் என குற்றம் சாட்டியுள்ள தாய்லாந்தின் தற்காலிக பிரதமர் பும்தம் வெச்சாயாசாய், மோதல் முடிவுக்கு வராவிட்டால் அது போராக வெடிக்கும் என எச்சரித்துள்ளார். அவர் பாங்கொக்கில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“நாங்கள் அண்டை நாடுகள் என்பதால் சமரசம் செய்ய முயற்சித்தோம். அதேநேரத்தில், அவசர காலங்களில் உடனடியாக செயல்பட எங்கள் நாட்டு ராணுவத்துக்கு நாங்கள் உத்தரவிட்டுள்ளோம். நிலைமை மோசமடைந்தால், அது போராக உருவாகலாம், இருப்பினும் இப்போதைக்கு, அது மோதல் என்ற அளவில் மட்டுமே உள்ளது.” என்று தெரிவித்தார்.

தாய்லாந்து இராணுவத்தின் தாக்குதல் காரணமாக கம்போடியா எல்லையில் வசிக்கும் மக்களும் வெளியேறி வருகின்றனர். எல்லையிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கம்போடிய நகரமான சாம்ராங்கில் இருந்து பலரும் பொருள்களுடன் வாகனங்களில் வேகமாக வெளியேறி வருகின்றனர் என பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

## கம்போடியா, தாய்லாந்துவுக்கு பயணிப்பதை தவிர்க்குமாறு தனது பிரஜைகளுக்கு பிரிட்டன் அரசு அறிவுறுத்தல்

கம்போடியா மற்றும் தாய்லாந்து இடையிலான எல்லைப் பிராந்தியங்களில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையால், பிரிட்டன் அரசு, தனது பிரஜைகள் கம்போடியா மற்றும் தாய்லாந்தில் சில பகுதிகள் நோக்கி பயணிப்பதைத் தடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

கம்போடியா– தாய்லாந்து எல்லைக்கு அருகிலுள்ள தெற்கு பகுதிகள், தாக்குதல்கள் மற்றும் பாதுகாப்பு சீர்கேடுகள் காரணமாக அதிக ஆபத்தானவை என அறிவிக்கப்பட்டுள்ளன.



இந்த நிலையில், பிரிட்டன் அரசு, தனது குடிமக்களுக்கு பாதுகாப்பான பகுதிகளிலேயே இருக்குமாறும் அரச உத்தியோகபூர்வ அறிவுறுத்தல்களுக்கு கட்டுப்பட்டிருக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, இந்நிலைமை, மேலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியது என்றும் பயணிகள் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# இந்திய மீனவர்கள் 7 பேருக்கும் ஓகஸ்ட் 6 வரை மறியல் நீடிப்பு!

யாழ்.நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த 13ஆம் திகதி கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கு மாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக் கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் நளினி சுபாஸ்கரன் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இந்திய இழுவைப் படகையும், அதில் இருந்த 7 இந்திய மீனவர்களையும் கைது செய்திருந்தனர்.

பின்னர் மேற்படி மீனவர்களை இழுவைப் படகுடன் கடற்படையினர் காங்கேசன்துறைக் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் மீனவர்களை ஒப்படைத்த னர்.

7 இந்திய மீனவர்களையும் கடந்த 13ஆம் திகதி ஊர்கா வற்றுறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதை யடுத்து அவர்களை ஜூலை 25ஆம் திகதி (நேற்று) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப் பித்திருந்தார்.

இந்நிலையில், மேற்படி மீனவர்களின் வழக்கு ஊர்கா வற்றுறை நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகு தியில் 25 படகுகளுடன் 185 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 26.07.2025


மேஷம்

இன்று நீங்கள் உங்களின் அறிவுத் திறனை இழக்க நேரும். உங்கள் பேச்சில் பதற்றமும் வேதனையும் பிரதிபலிக்கும். பிரார்த்தனை நல்ல பலனைத்தரும்.

பணியில் மந்த நிலை காணப்படும். முறையான திட்டமிடல் இருந்தால் நீங்கள் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடனான உங்களின் அனுகு முறையில் ஈகோ பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

தேவையில்லாத செலவுகளால் மனக் கவலைகள் ஏற்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் கூடுதலாக இருக்கும்.

மூட்டு வலி அல்லது தோள்களில் வலி போன்ற உபாதைகள் ஏற்படலாம். பதற்றத்திலிருந்து விடுபட தியானம் மேற்கொள்ளுங்கள்.


ரிஷபம்

இன்றைய நாளில் மோசமான சூழ்நிலை காணப்படும். அவற்றை சமாளிப்பதற்கு போதுமான தைரியம் இழந்து காணப்படுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நிறைந்திருக்கும். அதை மாற்றி நேர்மறையாக்குங்கள்.

இன்று வேலையில் மும்மரமாக இருப்பீர்கள். இணக்கமான அணுகுமுறை இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடித்து வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலின் காரணமாய் நல்லுறவை பராமரிக்க முடியாது. இது மகிழ்ச்சியை சீர் குலைக்கும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். குறைந்த அளவே நிதி காணப்படுவதால் உங்கள் பொறுப்புகளை பூர்த்தி செய்ய இயலாது.


மிதுனம்

இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாளாக இருக்க வாய்ப்பில்லை. ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். இன்று மனதை அமைதியாகவும் சமநிலையுடனும் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணியில் முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். இன்று உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை திணிப்பீர்கள். நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள அத்தகைய உணர்ச்சிப்பூர்வமான போக்குகளை தவிர்ப்பது நல்லது.

பணஇழப்பு காணப்படுகின்றது. உங்கள் அலட்சியமான போக்கால் நீங்கள் பணம் இழக்க நேரலாம்.


கடகம்

இன்றைய நாள் நீங்கள்விரைந்து முடிவெடுப்பதற்கு சாதகமாக அமையும். உங்களின் உறுதியான மற்றும் தைரியமான மனநிலை மற்றும் அதனுடன் சேர்ந்த உங்கள் திறமை காரணமாக உங்கள் இலட்சியத்தில் நீங்கள்வெற்றி காண்பீர்கள்.

இன்று குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதம் இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தை மேம்படுத்த உதவும்.

பணவரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க போதுமான பணம் காணப்படும்.


சிம்மம்

இன்று அழுத்தமான சூழ்நிலைகளும் வெற்றிக்கு குறைந்த வாய்ப்புகளும் காணப்படுகின்றன. தினசரி அலுவல்களை எச்சரிக்கையான அணுகுமுறையுடன் கையாளவும்.

உங்களிடம் காணப்படும் குறைந்த தன்னம்பிக்கை காரணமாக திறமையாக பணிகளை ஆற்றுவது கடினம். இதனால் பணிகளில் தொய்வு காணப்படும். புணியாற்றும் முறைகளை திட்டமிடுவது நல்லது.

புரிந்துணர்வில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படும்.உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று வீணாண செலவுகள் செய்வதற்கான சாத்தியம் உள்ளது.


கன்னி

இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். தினசரி செயல்களை மேற்கொள்வதும் கூட இன்று கடினமாக இருக்கும். களிப்பான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் இன்று நற்பலன்களைக் காணலாம்.

பணிகளில் தவறுகள் நேரலாம். பணிகளில் தவறுகள் நேராமல் தடுக்க உங்கள் நிலைமையை உத்தேசித்து உங்கள் செயல்திறனை மேம்படுத்த வேண்டும்.

பாதுகாப்பின்மை என்ற உணர்வு உங்களை பாதிக்கும். அதனை உங்கள் துணையிடத்திலும் வெளிப்படுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை கழிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்திக்கொள்ளுங்கள்.

செலவுகள் பெருகி காணப்படும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு நீங்கள் கடன் வாங்குவீர்கள்.


துலாம்

இன்று யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படக் கூடாது. அமைதியாக இருந்தால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். வெளியிடங்களுக்குச் செல்வது ஆறுதலை அளிக்கும்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான செயல்திறன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்களின் அகந்தையான போக்கை காண்பிப்பதால் உறவின் நல்லிணக்கம் சீர்குலையும். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள அத்தகைய உணர்வுகளை தவிர்த்துவிடுங்கள்.

தேவையில்லாத செலவினங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் உங்கள் செலவு செய்யும் பழக்கத்தை கட்டுப்படுத்துவது அவசியம்.


விருச்சிகம்

உறுதியுடனும் தைரியத்துடனும் செயல்பட்டு இன்று செயல்களில் வெற்றி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்களின் பணியாற்றும் முறையில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் செய்த பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாய் மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுபவிப்பீர்கள்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். உங்களுக்கு ஆழ்ந்த திருப்தி உண்டாகும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளுமின்றி முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.07.2025




முக்கியமான விஷயங்களை நிறைவேற்றுவதற்கு உகந்த நாள். ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

உங்கள் பணிவளர்ச்சியில் தடைகள் காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் பணிகளைக் கையாண்டால் பணிச்சுமைகளை கையாளலாம்.

உங்கள் துணையுடனான நேர்மையான போக்கு அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்த நேர்மை சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுக்கும்.

பணம் அதிகம் பெறுவதற்கான அதிர்ஷ்டம் உள்ளது. கணிசமான தொகையை சேர்ப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவுமுறையை வளர்த்துக்கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று அறிவுப்பூர்வமான அணுகுமுறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் மூலம் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்படாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்.




இன்று முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களுடைய உறுதியான முயற்சியால் நீங்கள் மேற்கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மன ஆற்றலும் நேர்மறையான எண்ணங்களும் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

பணியில் தவறுகளைக் குறைக்கும் வண்ணம் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கவனச் சிதறல்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்வீர்கள். இது உங்கள் இருவருக்கிடையேயான உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

நிதிநிலைமை ஸ்திரத்தனமையுடன் காணப்படும். கையில் உபரி பணம் காணப்படும்.

# கிண்ணியா ஹோட்டல் உரிமையாளர்கள் சட்டத்தை மீறினால் பாரபட்சமின்றி நடவடிக்கை

## தவிசாளருடனான சந்திப்பில் தெரிவிப்பு





**(ஹஸ்பர் ஏ.எச்.)**

கிண்ணியா நகர சபை எல்லைக்கு உட்பட்ட ஹோட்டல் உரிமையாளர்களுடனான சந்திப்பொன்று கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம். மஹ்தி தலைமையில் கிண்ணியா நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி வைத்தியர் ஏ.எம். எம்.அஜீத், நகர சபைச் செயலாளர் அனீஸ், வர்த்தக சங்க பிரதி நிதிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் சுற்றுலா துறையின் மேம்பாடு, சுகாதாரத்தை பேணுதல், போசாக்கின் தரத்தை மேம்படுத்துதல், ஹோட்டல் ஊழியர்களின் சீருடைகள், கழிவுகள் வெளியேற்றம், நோய்த்தொற்று, மேற்பார்வை, சட்ட நடவடிக்கை, வர்த்தக அனுமதி, விலை நிர்ணயம், போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கங்கள் விரிவாக ஆராயப்பட்டது.

எதிர்காலத்தில் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் கிண்ணியா நகர சபையும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து கண்காணிப்பு பணிகளில் ஈடு படுவதோடு சட்ட நடவடிக்கைகளும் பாரபட்சமின்றி மேற்கொள்ளப்படும் என்று அறிவுறுத்தல்களும் இதன்போது வழங்கப்பட்டன.